## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

IA.No.04/2023 in OS 59/2019 நாள்– 23.07.2025

வாதியின் / பிரதிவாதியின் CW1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.மலைக்கண்ணன், Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– திரு.S.சிவக்குமார்(CW1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

**மனுதாரர் தரப்பு விசாரணை**

1) இந்த வழக்கின் நீதிமன்ற ஆணையர் நான் தான் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது நான் தாவா சொத்தை அளந்து சமர்பித்த அறிக்கை என்றால் சரிதான். தாவா சொத்தானது சாத்தூர் நந்தவனப்பட்டி, தெற்கு தெருவில் உள்ளது என்றால் சரிதான். நான் சமர்பித்த அறிக்கையில் 2 ம் பக்கத்தில் 3 வது பத்தியில் 4 வது வரியில் 2.6 மீட்டர் பால்பாண்டி வீடு, அதன் சர்வே எண்.46 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) அதன் பின்னர் 2.3 மீட்டர் நாகலட்சுமி வீடும், அதன் சர்வே எண்.45 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின்னர் 9 மீட்டரில் இரண்டு வீடுகள், அந்த வீட்டில் சடையாண்டி மற்றும் பால்ராஜ் குடியிருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சடையாண்டி மற்றும் பால்ராஜ் ஆகியோர் வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சர்வே எண்.45 ல் இருக்கும் நாகலட்சுமி வழக்கின் 3 ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

3) அறிக்கையில் ஒரு காலியிடம் உள்ளது என குறிப்பிடுகையில் அந்த காலியிடத்தின் அளவானது கிழமேல் 17 அடியாகவும், தென்வடல் 14.6 அடியாகவும் இருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலியிடம் யார் பெயரில் உள்ளது, அதன் பட்டாவை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4) சர்வே எண்கள்.44, 45, 46–ல் குறிப்பிடப்பட்டுள்ள 2.6 மீ, 2.3 மீ, 9 மீ மொத்தம் 13 அடியாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலியிடத்தில் பனைமரத்தின் சட்டங்களும், ஓடுகளும், கொடிக்காய்மரம், பப்பாளி மரம், மாதுளை செடி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவை யாருக்கு சொந்தம் என்பதை குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 3, 4 பாராவில் திருத்தப்பட்டு உள்ளது என்றும், மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்ட நகலில் திருத்தம் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு அளிக்கப்பட்ட Warrant–ல் தாவா சொத்தினை பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடத்தினை சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள சாத்தூர் நந்தவனப்பட்டி, தெற்கு தெருவை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிதேன் என்றால் சரிதான். அவ்வாறு அறிக்கை சமர்ப்பித்து வரைபடம் தாக்கல் செய்து, அதில் அளவுகளும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் சமர்ப்பித்த வரைபடத்தில் பால்ராஜ் வீட்டின் தென்புறம் ஒரு காலியிடத்தில் ஒரு குளியலறை உள்ளது என காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த குளியல் அறை நான் பார்வையிட்ட சமயத்தில் பூட்டப்பட்டிருந்தா என்றால் பூட்டப்பட்டிருந்தது. அந்த பூட்டப்பட்ட அறையை யார் திறந்து எனக்கு காண்பித்தார்கள் என்றால் இந்த மனுவின் எதிர்மனுதாரர்கள் காண்பித்தார்கள். மேற்படி குளியலறையை அளந்து அளவுகளை அறிக்கையில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

3) நான் சமர்ப்பித்த அறிக்கையில் சர்வே ஆவணங்களின் படியும், எனக்கு கொடுக்கப்பட்ட Warrant–ன் அடிப்படையிலும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்குமால்களையும் எனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். குளியலறை அருகே பனைமரம், பப்பாளி மரம் ஆகியவை உள்ளன என்றால் சரிதான். தாவா சொத்திற்கு உண்டான தனி அளவுகள் அறிக்கையில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு அளிக்கப்பட்ட Warrant–ல்

சொத்துக்கள் சம்மந்தமாக யாரையும் விசாரிக்க வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.